# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 9 (LW 15 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திருமதி. பத்மாதேவி** | **தொழில்** | |
| **க பெயர்** | ரமேஷ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **12.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது திருப்பூரில் குடியிருக்கிறேன். பனியன் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். வழக்கில் இறந்த பன்னீர் செல்வம் என் சித்தப்பா, வழக்கின் புகார்தாரர் என் கணவர் ஆவார். கடந்த 06.05.2021 என் உறவினர் அம்மாய் இறந்து விட்டதல் நாங்கள் வள்ளுவர் நகருக்கு சென்றிருந்தோம். அப்போது உணவு வாங்க எனது உறவினர் பன்னீர்செல்வம், என் கணவர் ரமேஷ் ஆகியோர்கள் சென்றிருந்தார்கள். அப்போது உணவு வாங்கும் இடத்தில் ஏதோ பிரச்சனை ஏற்பட்டதில் என் சித்தப்பா பன்னீர்செல்வத்திற்கு பின் தலையில் காயம்பட்டதாகவும், என் கணவருக்கு காலில் காயம் ஏற்பட்டதாக சொல்லி என் கணவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல் கேள்விப்பட்டு நான் போய் பார்த்தேன். என் கணவர் காலில் அடிபட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது எரியோடு காவலர் சம்பவம் பற்றி விசாரிக்க வந்திருந்தார். அப்போது என் கணவர் சம்பவம் பற்றி வாக்குமூலமாக சொன்னார். அதை எழுதிக் கொண்டார்கள். மேற்படி புகார் வாக்குமூலத்தில் என் கணவர் கையெழுத்திட நான் சாட்சி கையெத்திட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலத்திலுள்ள சாட்சி கையொப்பம் **அ.த.சா.3.ஆகும்.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1,2 <u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

போலிசார் வாக்குமூலம் வாங்கும்போது 06.05.2021 விடியற்காலை 04.00மணி இருக்கும் புகார் வாக்குமூலம் வாங்கிய போலிசார் பெயர் தெரியாது. அவர் எந்த பதவியில் உள்ளவர் என்று எனக்கு தெரியாது. என் கணவரை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த போது அடையாளம் தெரியாத 2 நபர்கள் தள்ளிவிட்டதாக

**சொன்னார் என்றால் சரிதான். புகாரை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:15:43 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.